# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,898—1970 මාර්තු 20 වැනි සිකුරාදා—1970.3.20

14,898 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மாச்சு மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 253 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 259 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | எல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 263 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலத்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(1) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.*

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் தி.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினல், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியமனக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினல் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றே அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றே வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.— தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

No. AB. 30/X. 2216/70

## திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சிலுள்ள திட்டமிடல் உத்தியோகத்தர்கள் பதவி

திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சிலுள்ள திட்டமிடல் உத்தியோகத்தர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ண்ப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல்வேண்டும் :—

(அ) உண்ணுட்டு விண்ணப்பப்பங்கள் : 1970.4.10.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1970.4.15.

குறிப்பு.— (i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினல் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்குரிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவிகள் நிரந்தர மானவையும் உபகாரச் சம்பளத்துக்குரிமையுடையவையுமாகும். தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் மூன்றாண்டுக் காலம் தகுதி காண் நிலையிலிருப்பார்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

இப்பதவிக்குரிய திரட்டிய சம்பளம் ஆண்டுக்கு ரூபா 7,440 ஆகத் தொடங்கி, ரூபா 360 இல் பத்தும் ரூபா 480 இல் பதினொன்றும் ஆண்டு ஏற்றங்களாகக்கொண்டு, ரூபா 16,320 வரை செல்லும் ; 11,040 ரூபாவுக்கும் 14,400 ரூபாவுக்கும் முன் வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1970.4.10 ஆந் தேதி அன்று இருபத்திரண்டு வயதுக்குக் குறையாதவராயும் முப்பத்தைந்து வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கெனவே நிரந்தர நியமனங்கள் பெற்றிருப்போரின் வயதெல்லைகள் கவனிக்கப்படமாட்டா).

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் பொருளியல், வணிகவியல், புள்ளிவிவரவியல், கணிதம், புவியியல், விவசாய பொருளியல், சமூகவியல் ஆகிய பாடங்களில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்பு (ஒனர்ஸ்) பட்டம் பெற்றவராய், அல்லது மேற்குறிப்பிட்ட பாடங்களில் ஒன்றில் மேற்பட்டம் பெற்றவராயிருத்தல் வேண்டும் முதலியன.

குறிப்பு.—எந்திரவியல், விவசாயம் அல்லது வேறு ஏதாவதொரு விஞ்ஞானப் பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்பு (ஒனர்ஸ்) பட்டம் பெற்றவராய் அல்லது கலை அல்லது விஞ்ஞானத்தில் முதலாம் வகுப்பு சிறப்பு (ஒனர்ஸ்) பட்டம் பெற்று திட்டமிடல் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான தேர்ச்சியடைவதற்காகத் தகுந்த முறையில் பயிற்சி பெற விருப்பமுடையோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்போது, சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சானறிதழ் (**முக்கிய குறிப்பு :**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப்பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல்வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய தேதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப் பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக் கமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
அ. பெ. இல. 500.
காலிமுகச் செயலகம்,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 13 ந உ.

3—436—20.3.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## பாற்சபை

### வெற்றிடங்கள்

பாற்சபையின் சேவையில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் நிரப்பப்பட்டு இதன்கீழ் கையெழுத்திட்டவருக்கு 1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 31 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

### பிரதான அக நிலைக் கணக்காய்வு உதவியாளர் தரம் V

**வேதனம் :** மாதமொன்றுக்கு ரூபா 600—8 × 25—800 (எல்லாம் உட்பட). தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர் அவரின் கல்வித்தகைமை அனுபவம் என்பவற்றைப் பொறுத்து பொருத்தமான சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தப்படுவார்.

**தகைமைகள் :** ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(i) பாரம்பரியத்தால் அல்லது பதிவால் இலங்கைக் குடிமகனாயிருத்தல் வேண்டும்.

(ii) 1970 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(iv) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் 4 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றுத் தேறியவராய் அல்லது பொ.த.ப. (சாதாரணம்) பரீட்சையில் 4 பாடங்களில் திறமைச் சித்தி பெற்று 6 பாடங்களில் தேறியவராயும்.

(v) நன்கு மதிக்கப்பட்ட கணக்காளர் நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கத்திணைக்களம் ஒன்றில், யாக்கத்தில் அல்லது வணிகத் தாபனம் ஒன்றில் 10 ஆண்டுகளாவது நிலைக்கணக்காய்வில் அனுபவம் பெற்றவராயுமிருத்தல் வேண்டும்.

### அக நிலைக் கணக்காய்வு உதவியாளர் தரம் VI

**வேதனம் :** மாதமொன்றுக்கு ரூபா 325—14 15/2 × 20—575 (எல்லாமுட்பட).

தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர் அவரின் கல்வித்தகைமை அனுபவம் என்பவற்றைப் பொறுத்து பொருத்தமான சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தப்படுவர்.

**தகைமைகள் :** ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(i) பாரம்பரியத்தால் அல்லது பதிவால் இலங்கைக் குடிமகனாயிருத்தல் வேண்டும்.

(ii) 1970 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ம் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(iv) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சையில் 4 பாடங்களில் திறமைச் சித்திபெற்றுத் தேறியவராய் அல்லது பொ.த.ப. (சாதாரணம்) பரீட்சையில் 4 பாடங்களில் திறமைச்சித்திபெற்று 6 பாடங்களில் தேறியவராயும்.

(v) நன்கு மதிக்கப்பட்ட கணக்காளர் நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கத்திணைக்களம், யாக்கம் அல்லது வணிகத்தாபனம் ஒன்றில் கணக்காய்வில் குறைந்தது 5 ஆண்டு அனுபவம் பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

## அக நிலைக் கணக்காய்வு உதவியாளர்கள் தரம் VII

**வேதனம் :** மாதமொன்றுக்கு ரூபா 250—20 × 10—450 (எல்லாம் உட்பட).

தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர் அவரின் கல்வித்தகைமை அனுபவம் என்பவற்றைப் பொறுத்து பொருத்தமான சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தப்படுவார்.

**தகைமைகள் :** ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் ;—

(i) பாரம்பரியத்தால் அல்லது பதிவால் இலங்கைக் குடிமகனாயிருத்தல் வேண்டும்.

(ii) 1970 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ம் திகதி 20 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(iv) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சையில் 4 பாடங்களில் திறமைச் சித்திபெற்றுத் தேறியவராய் அல்லது க.பொ.த.ப. (சாதாரணம்) பரீட்சையில் 4 பாடங்களில் திறமைச் சித்திபெற்று 6 பாடங்களில் தேறியவராயும் இருத்தல் வேண்டும்.

(v) நன்கு மதிக்கப்பட்ட கணக்காளர் நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கத்திணைக்களம் ஒன்றில் யாக்கத்தில் அல்லது வணிகத்தாபனம் ஒன்றில் 3 ஆண்டுகளாவது கணக்காய்வில் அனுபவம் பெற்றவராயுமிருத்தல் வேண்டும்.

2. **சேவை நிபந்தனைகள்.**—(அ) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டவிடத்து இப்பதவியில் நியமனம் பெறுவதற்குமுன் தான் அரசாங்கத்தில் வகிக்கும் நிலையான பதவியை துறத்தல் வேண்டும். அப்படியாக அரசாங்க அங்கீகாரத்துடன் பதவியைத்துறக்குமிடத்து சபையின் சேவையிற்சேரும் தருணத்தில் உபகாரச்சம்பளச் சுற்றறிக்கையின் 48 அ பிரிவினுள்ளபடி உபகாரச் சம்பளங்கள் யாவற்றையும் தொடர்ந்து வைத்திருப்பர். திணைக்கள, யாக்க உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் யாவும் 1965 ஒகஸ்து 20 ஆம் திகதி வெளிவந்த 666 ம் இலக்கத் திறைசேரிச்சுற்றறிக்கைக்கு இணங்கவே கவனிக்கப்படும். திணைக்கள அல்லது யாக்கத் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட திறைசேரிச் சுற்றறிக்கைக்கு இணங்க விடமுடியுமா என்பதனை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) அபேட்சகர்கள் அரசாங்க சேவையில் முன்னரே உறுதிப் படுத்தப்பட்டாலன்றி நியமனங்கள் யாவும் நியமித்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகட்குத் தேர்வாய்வுக்குரிய முறையில் அமையும்.

(இ) விண்ணப்பகாரர் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட விதிகளுக்கு இணங்கவும் தற்போதிருக்கும் அல்லது இனிமேல் உருவாக்கப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்க அரசாங்க மொழிக் கொள்கைக்கு அமைந்து நடக்கும்படி வேண்டப்படுவர்.

(ஈ) இடைப்பிறவரலாக, அரசகருமமொழித் தேவைகளுக்கிணங்குவதைப் பொறுத்தே தேர்வாய்வுக்குரிய கால எல்லை முடிந்தபின் உறுதிப்படுத்துவது தங்கியிருக்கும்.

3. **ஒப்பந்த நியதிகள்.**—இப்பதவி நிரந்தரமானது. தேர்ந்தெடுக்கப் பட்ட அபேட்சகர் சகாயநிதி நன்மைக்குரித்தாவார்.

4. **பிணை.**—தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர் பிணைப்பணம் செலுத்தும்படி வேண்டப்படுவர்.

5. **மருத்துவச் சோதனை.**—நியமனம் பெறுபவர் சபையின் மருத்துவ உத்தியோகத்தர் நடாத்தும் மருத்துவச் சோதனையில் தேறுதல் வேண்டும்.

6. விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க்குறிப்பிட்ட அத்தாட்சிச் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (நன்கு கவனிக்குக. சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்படும் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) மிகக்கூடிய கல்விச் சான்றிதழும் உயர்தொழிற்றகைமைச் சான்றிதழ்களும் ;

(இ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு இவற்றுள் ஒன்று கல்லூரித் தலைவரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) தற்போது வேலைசெய்பவரிடமிருந்தும் முன்னர் வேலைவழங்கியவர்களிடமிருந்து அங்கு ஆற்றிய கடமைகளின் தன்மையை உணர்த்தும் சான்றிதழ்.

7. அரசாங்க உத்தியோகத்தர்களும் யாக்க உத்தியோகத்தர்களும் தங்கள் விண்ணப்பங்களை முறையே தத்தம் திணைக்கள, யாக்கத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகள் யாவும் தலைவர், பாற்சபை என்ற முகவரிக்கேயன்றி வேறெந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

தலைவர்,
பாற்சபை.

பாற்சபைத் தலைமை அலுவலகம்,
33 எலிபாங்க் வீதி,
கொழும்பு 5.

**பாற்சபை**

**விண்ணப்பப்படிவம்**

1. பதவி : ————.
2. முழுப்பெயர் : ————.
3. சொந்த முகவரி : ————.
4. சாதியம் : ————.
5. விண்ணப்பகாரரின் பிறந்த திகதியும் இடமும் வயதும் (பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்) : ————.
6. விண்ணப்பகாரரின் தந்தையின் பிறப்பிடம் : ————.
7. ஆகக்கூடிய கல்வித்தகைமைகளும் உத்தியோகத்தகைமைகளும் : (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கவும்)
8. சிங்களத்திலும் அல்லது தமிழிலுமான அறிவு : ————.
9. தற்போது வகிக்கும் தொழிலின் விபரம் : ————.
10. முன் அனுபவ விபரம் : ————.
11. விண்ணப்பகாரரின் குணநலச்சான்று பகரும் இருவரின் பெயர்கள் : ————. (குணநலச்சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

3–281—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## நாடு நகர நிர்மாணப் பிரிவு

**உள்ளூராட்சி அமைச்சு**

## நில அளவையாளர் பதவி (அமயம்)

கதிர்காமம் பேணுகைச் சபைத்திட்டத்து வேலைகளுக்காக அமைய அடிப்படையிலான நில அளவையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் கீழே தரப்பட்டிருக்கும் படிவத்தில் தயாரிக்கப்பட்டு 1970, ஏப்பிரல் 9 ம் திகதியிலோ அல்லது அதற்கு முன்பாகவோ எனக்குக் கிடைக்குக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய (குறித்த) வருடாந்தத் திரட்டிய சம்பளம் ரூபா 4,155.

3. **தேவையான தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தான் :

(அ) 9.4.70 ல் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும் ,

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் அளத்தலினும் மட்டம் பார்த்தலினும் தகுதித் தேர்வுப் பத்திரத் (டிப்ளோமா) தைப் பெற்றவராகவும் அல்லது கனிட்ட தொழில்நுட்ப அலுவலாளர் பயிற்சி நெறியை இலங்கைத்தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றவராகவும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையைப் பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் : (முக்கிய குறிப்பு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சன்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(2) உயர்கல்வித்தகைமைச் சான்றிதழ் ;

(3) தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ் ;

(4) சமீபகாலத்தில் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள்.

5. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள; அவற்றைப் பார்க்க.

டபிள்யு. பத்மநாதன்,
சிரேட்ட உதவிச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

உள்ளூராட்சி அமைச்சின்
நாடு நகர நிருமாணப் பிரிவு,
டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 10 ந உ.

## உள்ளூராட்சி அமைச்சின் நாடு நகர நிர்மாணப் பிரிவு

### நில அளவையாளர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர் : ————.
2. தற்போதய முகவரி : ————.
3. பிறந்த இடமும் திகதியும் : ————.
4. தேசிய இனம் : ————.
5. தற்போது ஏதும் பதவி வகிப்பின் : ————.
6. தற்பொழுது பதவியில் இல்லாவிட்டால் கடைசியாக வகித்த பதவி : ————.
7. கல்வித் தகைமைகள் : ————.
8. தொழில்நுட்பத் தகைமைகள் : ————. (சித்தியெய்திய பாடங்களைக் கூறுக)
9. பயிற்சியின் விபரங்கள், தொழிற்பயிற்சி முதலியன, திகதிகளுடன் ————.
10. முந்திய அனுபவம், நியமனங்கள் முதலியனவற்றின் விபரங்கள் திகதிகளுடன் : ————.
11. ஏதாவது அரசாங்கத் திணைக்களத்தில் ஏற்கெனவே வேலையில் இருந்தால் அதைவிட்டு விலகியதற்குச் சரியான காரணம் : ————
12. சட்டமுறை நீதி மன்றத்தால் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டால் குற்றத்தின் விபரங்கள், தண்டனை ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

————,
ஒப்பம்.

திகதி : ————.

3–387—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### படவரைஞர் பதவி—தரம் II

காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் படவரைஞர் தரம் II பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழேகொடுக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ காணி அபிவிருத்தி அதிபர், கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

2. தேவையான தகைமைகள் :

(அ) வயது.— 1970.4.20 ல் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவும் 40 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல்வேண்டும்.

அத்துடன்

(ஆ) கல்வித்தகைமைகள்.— தூயகணிதத்தை ஒருபாடமாகக் கொண்ட சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சைச் சான்றிதழை உடையவராய் இருத்தல் வேண்டும். அல்லது கல்விப்பொதுத் தராதரப் (சாதாரணதரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, தூயகணிதத்துடன் ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத இருக்கைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(இ) தொழில்நுட்பத் தகைமைகள்.— பின்வரும் ஒன்றையும் உடையவராய் இருத்தல் வேண்டும் :—

(i) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டடநிருமாணிப்பில் மூன்றுவருட மாலைநேர அல்லது பகுதிநேரப் பயிற்சி நெறியை முடித்து எல்லாப்பகுதிகளையும் (அதாவது பகுதிகள் I, II, III) திருப்திகரமாக முடித்திருக்க வேண்டும். அத்துடன் சார்டட் பொறியியலாளர் அல்லது கட்டடக் கலைஞர் அல்லது மதிப்புவாய்ந்த பொறியியல் நிறுவக மொன்றில் தொழில்பயில் படவரைஞராக நான்குவருடங்களுக்கு வேலைசெய்த அனுபவமுடையவராய் இருத்தல் வேண்டும். (இந்தத் தகைமைகளையுடையவர் களுக்குக் கீழே சம்பளத்திட்டத்திற் சொல்லப்பட்டது போன்று நியமனத்தின்போது வருடாந்த சம்பளம் ரூபா 3,864 கொடுப்பதற்கு ஆராய்ந்து பார்க்கப்படும்).

அல்லது

(ii) 1947 ம் வருடத்திற்கு முன்னர் இலங்கைத் தொழில்நுட்பக்கல்லூரியின் கட்டடநிருமாணிப்புப் பயிற்சிநெறியின் பகுதி II ல் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும். அத்துடன் இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு அரசாங்கத் திணைக்களம் அல்லது மதிப்புவாய்ந்த வர்த்தக நிறுவக மொன்றில் ஒரு படவரைஞராக வேலை செய்த அனுபவமுடையவராய் இருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) மதிப்புவாய்ந்த பொறியியல் நிறுவகத்தில் அல்லது சார்ட்ட் பொறியியலாளர்கள் அல்லது கட்டடக்கலைஞர்களின் கீழ் ஒரு படவரைஞராக ஐந்து வருட வேலை செய்த அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(iv) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் ஒருவருடமுழுநேரப் படவரைஞர் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்தவராகவும் அத்துடன் தொழில் பயில் படவரைஞராக இரண்டு வருடங்கள் வேலை செய்த அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

(v) சிறுமேற்பார்வையாளர்களுக்குரிய பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்தவராகவோ அல்லது இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியின் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவராகவோ இருத்தல் வேண்டும். அத்துடன் தொழில்பயில் படவரைஞராக ஒருவருட வேலை செய்த அனுபவமுடையவராய் இருத்தல் வேண்டும்.

3. சம்பளத்திட்டம்.—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய வருடாந்த சம்பளத்திட்டம் ரூபா 3,432 —144 × 21—ரூபா 6,456 ஆகும். வருடாந்த சம்பளம் ரூபா 5,304 ஐ அடைய முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.

4. நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—பதவிகள் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமாகும். நியமனம் முதற்கண் மூன்று வருடங்களுக்குத் தகுதிகாண் நிலையில் உள்ளதாகும்.

5. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள. அவற்றைப் பார்க்குக.

6. தற்போது அரசாங்க சேவையில் இருப்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களத்தலைவர்களுக்கூடாக அனுப்பவேண்டும். உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்படின் அவரை விடுவிக்க முடியும் என்பதை அத்திணைக்களத்தலைவர் விண்ணப்பத்தில் குறிப்பிட்டால் மட்டுமே கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படும்.

7. விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப்பிரதிகளல்ல) இணைத்தல் வேண்டும் :—

(i) பிறப்புப்பதிவுச் சான்றிதழ்.

(ii) கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(iii) தொழில்நுட்பத் தகைமை, அத்துடன் அனுபவம் பற்றிய சான்றிதழ்–மேலே 2 (இ) யின் பிரகாரம்.

(vi) அண்மையில் பெறப்பட்ட இரண்டு நற்குணச்சான்றிதழ்கள். (ஏலவே அரசாங்க சேவையில் உள்ளவர்கள் இதை இணைக்க வேண்டியதில்லை).

8. விண்ணப்பம் முடிவுறும் திகதிக்குப் பின்னர் இவ்வலுவலகத்தில் வந்து சேரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

அமரதாச குணவர்த்தன,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
கொழும்பு 1, 1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 10 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**படவரைஞர் பதவி தரம் II**

**காணி அபிவிருத்தித் திணைக்களம்**

1. முழுப்பெயர் :————.
   குடும்பப் பெயர் :————.
   ஏனைய பெயர்கள் :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. தேசிய இனம் :————.
4. 1970.4.20 ல் வயது :————.
5. பிறந்த திகதி :————.
   (பிறப்பத்தாட்சிப் பத்திரப் பிரதி இணைக்கப்படவேண்டும்)
6. கல்வித்தகைமைகள், பரீட்சைத் திகதிகளும், சித்தியடைந்த பாடங்களும் :————.
   (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்குக)
7. விளம்பரத்தின் பந்தி 2 (இ) யின் பிரகாரம் நீர் பெற்ற தொழிற்றகைமைகள், உமது கூற்றுத் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்குக :—
   (i) தொழில்நுட்பத் தகைமைகள் :————.
   (ii) அனுபவம் :————.
8. நற்குணச்சான்றிதழ்கள் வழங்கியோரின் பெயர்களும், முகவரிகளும் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்குக) :————.
9. தற்போதைய தொழிலும் சம்பளமும் :————.
10. வேறு ஏதாவது விசேட தகைமைகள் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்குகொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக்காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், தேர்வுக்குப் பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கும் பாத்திரராவேன் என நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

3–319—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல.14,898

---

## உப அஞ்சல் அதிபருக்கான பதவி

**" ஏ " உபஅஞ்சல் அலுவலகம் சிறி குணனந்த மாவத்தை**

கொழும்பு 13 இல் உள்ள சிறி குணனந்த மாவத்தை உப அஞ்சல் அலுவலகத்தின் உபஅஞ்சல் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக்குறைந்த மாதாந்தப்படி ரூபா 75.

1. விண்ணப்பங்கள் இருபாலாரிடமிருந்தும் ஏற்றுக்கொள்ளப்படும். அவர்கள் இலங்கையராகவும். 1970.4.30 ஆம் திகதி அன்று 21 வயதுக்குக் குறையாதவர்களாகவும், 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரர்கள், 10 வருடங்களோ, அல்லது அதற்குக் கூடுதலாகவோ மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். உப அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள வட்டாரத்தில் அல்லது அதற்கு அருகாமையிலுள்ள வட்டாரங்களில் வதியும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3. சி. த. ப./க. பொ. த. பரீட்சையில், தமிழ்/சிங்களம், எண் கணிதம் உட்பட மூன்று பாடங்களிலாவது விண்ணப்பதாரர்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4. சிறி குணனந்த மாவத்தை உப அஞ்சல் அலுவலகத்தை அமைப்பதற்கு, வாடகை இன்றி ஒரு வீட்டினை விண்ணப்பதாரர் அளித்தல் வேண்டும்.

5. கொழும்பு 1, எச்சலன் சதுக்கம், 5ஆம் இலக்கக் கட்டிடத்திலுள்ள அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சர் (மேற்கு, தெற்கு) அவர்களிடமிருந்து அச்சடித்த விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 1970.4.30 ஆம் திகதியன்று, அல்லது அதற்கு முன்னராக அவரை அடையக் கூடியதாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

மேலும், விவரங்களை அறியவிரும்பினுல், அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் எம். அபேசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும், தந்திப் போக்குவரத்து அதிபரும்.

3–390—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## இலங்கை அரச கடற்படை

**மருத்துவ அலுவலர் பதவி**

இலங்கை அரச கடற்படையில் ஒரு மருத்துவ அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் இலங்கை அரச கடற்படையின் நிலையான கடற்படையில் நிலையான ஆணையுடைய சத்திர சிகிச்சைத் துணைநிலை அலுவலராக பதவி வழங்கப்பெறுவர்.

3. (அ) மருத்துவ அலுவலரின் சம்பள வீதம் சுகாதாரச் சேவைத் திணைக்களத்து மருத்துவ அலுவலர்களுக்குப் பொருத்தமான வீதங்களாகும்.

(ஆ) பின்வரும் படிகளும் செலுத்தப்படும் :—

(i) சேவைப்படி—துணைநிலை அலுவலருக்கும்—துணைநிலை ஏவுநர்க்கும் மாதத்துக்கு 180 ரூபா ; ஏவுநர்க்கு மாதத்துக்கு 225 ரூபா.

(ii) இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு உரிமையற்றபடி. இதே தகைமையுடைய அரசாங்க மருத்துவ அலுவலர்களுக்குப் பொருத்தமான வீதத்தில் செலுத்தப்படும்.

(iii) கடற்படைச் சம்பளக் கோவையை ஏற்பாடு செய்துள்ளவாறு தகைமைச் சம்பளம் அளிக்கப்படும்.

(iv) ஒரு சீருடைப்படி பின்வருமாறு செலுத்தற்பாலதாகும் : அயனமண்டலப் பிரதேசத்திற்குரிய ஒரு சீருடைக்கு தொடக்கத்தில் 650 ரூபா. மேலும், ஈராண்டுச் சேவை முடிவில் மாதமொன்றுக்கு 25 ரூபா ஒரு சீருடை பேணும் படியாகக் கொடுக்கப்படும்.

4. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் விவாகமானவராளுல், விவாகமானவருக்குரிய (இருந்தால்) வீட்டில் வசிப்பதற்கும் வேலையாள்படி ரூபா 75 ற்கும் தகுதியுடையவர். விவாகமாகாதவராயின் வேலையாளின் சேவையும் கடற்படை விடுதி வசதியுமிருக்கும்.

5. அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுக் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1934 பெப்புருவரி 5 இன் ஊளப்பாற்றுச் சம்பள அறிக்கையில் அமைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் ஊளப்பாற்றுச் சம்பளத்திற்குரியவராவர். மேலும் உயர்ச்சி விபரங்கள் அல்லது சேவை நிபந்தனைகள் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர், கொழும்பு, இலங்கை அரச கடற்படைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

6. விண்ணப்பகாரர் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டிருத்தல் வேண்டும் :—

(அ) தேசிய இனம் : விண்ணப்பகாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது : 1970 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20 ஆம் திகதி முப்பது வயதிற்கு (30 வயதிற்கு) மேற்படாதிருத்தல் வேண்டும்.

(இ) தொழிற் கல்வி, கல்வித் தகைமைகள் : விண்ணப்பகாரர், இலங்கை மருத்துவர் சபையில் ஈராண்டுக்கேனும் மருத்துவம் செய்வதற்குப் பதியப்பட்டவரும், மருத்துவத்திலும் சத்திர சிகிச்சையிலும் பட்டம் பெற்றவராகவும் அல்லது அதற்கு மேலதிகத் தராதரமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) மருத்துவத் தகுதி : விண்ணப்பகாரர் நியமனத்திற்கு முன் கடற்படையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச் சோதனையில் தேர்ச்சியும், கடற்படை நிபந்தனையில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ தராதரத்திற்கேற்ப இருக்க வேண்டும்.

7. இவ்விளம்பரத்தின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தைப் போல் தங்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைத் தயார் செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் 1970 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக " கடற்படைத் தளபதி, கடற்படைத் தலைமை அலுவலகம், தபாற் பெட்டி எண். 593, கொழும்பு—1 " என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது மேற்புறத்தில் " மருத்துவ அலுவலருக்கு விண்ணப்பம் " என எழுதப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படும்.

8. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள் சுகாதார சேவை அதிபருக்கு ஊடாக அனுப்பப்படல்வேண்டும். குறித்த விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படுமிடத்து, அச்சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் எனக் கூறும் சுகாதார சேவை அதிபரின் கடிதமொன்றுடன் அனுப்பப்படல் வேண்டும்.

9. கீழ்க்காணப்படும் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும் ;

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கூடுதலான கல்வித் தகைமையைக் காட்டும் சான்பதழும் உயர் தொழிலுக்குரிய சான்றிதழும் ;

(இ) விண்ணப்பகாரரை நன்றாகத் தெரிந்த பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட ஆகக் குறைந்தது இரு நற்சான்றிதழ்கள்.

10. விண்ணப்பங்கள் மேற்கூறிய நிபந்தனைகளின்படி இருந்து அவற்றின் தொகை காரணமாக ஒரு பூர்வாங்கத் தெரிவு தேவைப்படின் அது நடாத்தப்படும் இறுதித் தெரிவு, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரால் நியமிக்கப்பட்ட தெரிவுச் சபையால் நேர்முகப் பரீட்சையின் பின் செய்யப்படும்.

11. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தும் காலம், இடம், திகதி எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இந்நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறும். இதற்கான பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ இலங்கை அரசாங்கத்தால் கொடுக்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சைக்குத், தெரிவு செய்யப்படாத விண்ணப்பகாரர்களுக்கும் அதுபற்றி அறிவிக்கப்படும்.

12. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் புதிய சேவையாளராயிருந்தால், அரசாங்கத்தின் மொழிக்கொள்கையையும், விசேடமாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் செயற்படுத்துவதற்கு இதுவரையில் செய்யப்பட்ட சட்டங்களுக்கோ இதன்பின் இயற்றப்படும் சட்டங்களுக்கோ இணங்கி நடக்குமாறு வேண்டப்படுவர்.

ஆர். கதிர்காமர்,
றியல் அட்மிறல்,
கடற்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
தபாற்பெட்டி எண் 593,
கொழும்பு.
1970 ம் ஆண்டு மார்ச் மீ 10 ஆந் உ.

## மருத்துவ அலுவலருக்கு விண்ணப்பம்

### இலங்கை அரச கடற்படை

1. முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

2. தேசிய இனம் :————.
(வம்சாவழி அல்லது பதிவுவழி, இலங்கையர் எனக் குறிப்பிட வேண்டும். பதிவுவழி என்றால் பதியப்பட்ட திகதி, சான்றிதழின் இலக்கம் குறிப்பிட வேண்டும்).

3. முகவரி—அலுவலகம் :————. சொந்த :————.

4. பிறந்த திகதி :————.

5. பெற்றோரின் விபரங்கள் பின்வருமாறு தருக :

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | ————. | ————. | ————. |
| தாய் | ————. | ————. | ————. |

6. நீர் விவாகமானவரா அல்லது தனியாளா? :————.

7. பல்கலைக்கழகத்தில் அல்லது பள்ளிக்கூடத்தில் உடற்பயிற்சி அல்லது விளையாட்டுச் சம்பந்தப்பட்ட தனிச் சிறப்புத் தகைமைகள் ஏதும் உண்டா? :————.

8. பல்கலைக்கழகத்தில் அல்லது பள்ளிக்கூடத்தில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் ஏதும் சாதித்தது உண்டா ? :————.

9. ஆயுதந்தாங்கிய படையில் அல்லது தொண்டர் படைச் சேவையில் அல்லது பயிலுநர் சிறப்பணியில் அல்லது சாரணர் இயக்கத்தில் சேவை புரிந்திருக்கிறீரா? அங்ஙனமாயின் விபரம் தருக :————.

10. இப்பதவிக்கு வேறு சிறப்புத் தகைமைகள் உண்டா ? :————.

11. ஆயுதந்தாங்கிய படைச் சேவைக்கு நீர் முன்னர் விண்ணப்பித்துள்ளீரா? அங்ஙனமாயின் பெறுபேறு என்ன ? :————.

12. கல்விகற்ற பாடசாலையினதும் பல்கலைக் கழகத்தினதும் பற்றிய பின்வரும் விபரங்கள் தருக—
பல்கலைக் கழகத்தினதும் பாடசாலையினதும் பெயர் :————.
திகதி—சேர்ந்த :————. விட்ட :————.
பகிரங்கப் பரீட்சைகள் :————.

13. பல்கலைக்கழகத்தை விட்டபின் ஆற்றிய தொழில் பற்றிய கீழ்காணும் விபரங்கள் தருக—
வேலைகொள்வோரின் பெயர் :————.
தொழிலின் தன்மை :————.
சேவைக்காலம்—தொடக்கம் :————. வரைக்கும் :————.

14. நற்சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்களும் முகவரிகளும் தருக :————.

————.
திகதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

3–337—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை அரச விமானப்படை

இலங்கை அரச விமானப்படையின் கட்டுநாயக்கா தளத்திலுள்ள 115, 244, 191, 258, 260, 130 இலக்க கட்டிடங்களின் கூரை புதுப்பித்தலுக்குரிய கேள்விகள், கொழும்பு த. பெ. எண். 594 ஐக் கொண்ட அரச விமானப்படைத் தலைமை நிலையத்திலுள்ள கேள்விச்சபைத் தலைவரால் 10 ம் திகதி ஏப்ரல் 1970 வெள்ளிக்கிழமை மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள இலங்கை விமானப்படைத் தலைமைக் காரியாலயத்திலிருக்கும் பிரதான வேலை உத்தியோகத்தரிடமிருந்து இதுபற்றிய சகல விபரங்களையும் பெற்றுக்கொள்வதோடு அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே கேள்விகள் இருத்தல் வேண்டும். கேள்விப் படிவங்கள் 9 ம் திகதி ஏப்ரல் 1970 நண்பகல் 12 மணிவரை கொடுக்கப்படும். எல்லாக் கேள்விகளும் இரு பிரதிகளாகக் கையொப்பமிட்டு உறைகளிலிட்டு மெழுகிட்டு அவ்வுறையின் இடதுபுற மேல்மூலையில் " இலங்கை அரச விமானப்படையின் கட்டுநாயக்கா தளத்திலுள்ள கட்டடங்களின் கூரை புதுப்பித்தலுக்குரிய கேள்வி " எனக் குறிப்பிட்டு கேள்விச்சபைத்தலைவர், இலங்கை அரச விமானப்படைத் தலைமை நிலையம், த. பெ. எண். 594, கொழும்பு என முகவரியிட்டு அனுப்பப்படவேண்டும்.

3. 1,50,000 ரூபாவிற்குக் குறையாத பெறுமதியான கட்டிட வேலை புதுப்பித்தல் என அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக் காரர்களே பின்வரும் அத்தாட்சிகளுடன் கேள்விகளை அனுப்பத் தகுதி யுடையவர்கள் :—

(அ) பதிவு செய்யப்பட்டதற்கு அத்தாட்சி ;

(ஆ) திருப்பிப் பெறக்கூடிய கேள்விக் கட்டுப்பணமான 200 ரூபாவையும் திருப்பிப் பெறமுடியாத கேள்விப்பணமான 5 ரூபாவையும் கட்டியதற்கான பற்றுச்சீட்டுகள்.

4. திருப்பிப் பெறக்கூடிய கேள்விக் கட்டுப்பணம், கட்டுவதிலிருந்து பின்வரும் ஸ்தாபனங்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது :

(அ) கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் ;

(ஆ) மற்றைய அரசுகளின் அரசாங்க வர்த்தக நிறுவனங்கள்—உ-ம். சீனு தேசிய யந்திர இறக்குமதிக் கூட்டுத்தாபனம் ;

(இ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்ட கிராம அபி விருத்திச் சங்கங்கள் ;

(ஈ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்.

5. கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள இலங்கை அரச விமானப் படைத் தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன உத்தியோகத்தரும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கேள்விக் கட்டுப் பணத்தையும், கேள்விப் பணத்தையும் கட்டி அதற்கான பற்றுச்சீட்டையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எம். எஸ். மாறுப்,
ஸ்குவாட்றன் லீடர்,
விமானப் படைத் தலைவருக்காக.

3–338—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

வாழைச்சேனையிலுள்ள, கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கு பின்வருவன வற்றை வழங்குவதற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன :—

| | | |
|---|---|---|
| (1) 1200 நீள் தொன் | .. | பிளீச்ட் கிறுப்ட் (சல்பேட்) பல்ப் 1970.6.16 ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் |
| (2) 1400 நீள் தொன் | .. | பிளீச்ட் சல்பைட் பல்ப் 1970.5.30ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் |
| (3) 2000 நீள் தொன் | .. | சோடா எஷ் 1970.5.23 ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் |
| (4) 100 நீள் தொன் | .. | போர்ட்டிபைட் ரோஸின் சைஸ் 1970.6.10 ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் |

முதல்வர்கள்/வழங்குபவர்கள் ஆகியோரின் பெயர்களும் விலாசங் களும் அடங்கிய விண்ணப்ப மூலம் கேள்விப்பத்திர படிவங்களையும் மற்றும் ஏனைய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.
1970 மார்ச்சு 3 ம் திகதி.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர், கிழக்கிலங்கை
கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

3–426—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மொறவெவத் திட்டத்தில் குடியேற்ற அலுவலர் குடிமனைகள் முதலியன நிருமாணிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள்.

மேற்குறிப்பிட்ட திட்டத்தில் கீழ்க்காணும் கட்டடங்கள் நிருமாணிப்பதற் கான கேள்விப்பத்திரங்களைக் காணி அபிவிருத்தி அதிபர் 1970 ம் ஆண்டு எப்ரல் மாதம் 24 ந் திகதி மு. ப. 11.00 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

| | |
|---|---|
| குடியேற்ற அலுவலர் குடிமனை | 1 |
| குடியேற்ற அலுவலர் அலுவலகம் | 1 |
| கா. அ. க./ஓ. குடிமனைகள் | 1 |
| கிணறு | 1 |

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும்பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்)யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள எதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி 1970 ம் ஆண்டு 4 ம் மாதம் 22 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு-1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விக் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. கேள்விக்காரர்கள் பணம் கட்டியதற்குரிய பற்றுச் சீட்டைப் பத்திர மாக வைத்திருந்து பணத்தை மீளப்பெற விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப் பத்திரங்களுடன் இணைக கக்கூடாது.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள் விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின், கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக் கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "மொறவாவித் திட்டத்தில் குடியேற்ற அலுவலர் இல்லம் முதலியன நிருமாணிப்பதற்கான கேள்விப்பத்திரம்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடது பக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையு மாகும். கேள்விப் பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விகளை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து ஒன்பது மாதங் களுக்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து பிணைப் பணம் செலுத்தவும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வைப்புப்பணம் பறி முதல் செய்யப்படுவதுடன் அவர் அர சாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய ஒப்பந்தக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1970 ஆண்டு எப்ரல் மாதம் 24 ந் திகதி முற்பகல் 11.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங் கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விக்காரர் குறைந்தது 50,000 ரூபாவுக்கு பொது வேலைத் திணைக்களம்/நீர்ப்பாசன/கல்வி அல்லது காணி அபிவிருத்தித் திணைக் களம் முதலியவற்றில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேணடும். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங் களுக்கு விண்ணப்பிக்கும் போது பதிவு செயயப்பட்டதை நிரூபிக்க வேண்டும்.

11. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலைநடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றை யேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத் திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

13. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறி யியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தி. சு. சுப்பிரமணியம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மார்ச்சு 12 ந் திகதி.
சீரீ–2–408.

3–389—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கொழும்பு உப–பிரிவு

கீழே சொல்லப்பட்ட வேலைக்கு கேள்விப்பத்திரம் கொழும்பு 5, ஜாவத்த வீதியிலுள்ள மேற் பிரிவு பெரும்பாக பொறியியலாளர் அவர்களால் 1970 ம் ஆண்டு சித்திரை மாதம் 8 ந் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனே திறக்கப்படும்.

2. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேலைக்கு நேராக உள்ள தொகைக்கோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களுமே இவ்வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரரின் பதிவுத் தொகை | கேள்விக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| (1) களனி வடக்கு அணைக்கு வேண்டிய திருத்தங்கள் | 40,000 .. | 50 |

3. இக் கேள்விக்காக வெற்றுப் பத்திரம் கொழும்பு, கழுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி ஆகிய உப–பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் காரியாலயங்களில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு சித்திரை மாதம் 5 ந் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விக் காரர்களாக முன்வருவோரைக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தகுதியுடையவர்களா அல்லவா என்று ஆராய்ந்தறியும் பொருட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குத் தங்கள் பதிவுப் புத்தகத்துடன், தாங்கள் தற்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவைகளின் பெறுமதிகளையும் ஒரு பத்திர மூலம் கேள்விக்காரர்களாக வருவோர் வெற்றுப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் பெறுமுன் 1970 ம் ஆண்டு சித்திரை மாதம் 5 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அலுவலக நேரத்தில் மேற்கூறிய கேள்விக் கட்டணத்தை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் கட்ட வேண்டும் அல்லது ஒரு கச்சேரியில் கட்டிய பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேற்படி வேலைகளைப் பற்றிய படங்களையும் வேறு தேவையான விபரங்களையும் அலுவலக நேரங்களில் கொழும்பு உப–பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. எச். பெரேரா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கொழும்பு உப–பிரிவு.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
ஜாவத்த வீதி,
கொழும்பு 5,
11.3.1970.

3–345—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### பொல்கொல்ல வேலைகள்

கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் பொல்கொல்ல பகுதி, மகாவலி திட்ட பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் 1970 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 7 ம் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். நீர்ப்பாசன திணைக்களத்துடன் ரூபா 50,000க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்கள் மாத்திரமே தகுதியுடையவராவர்.

1. மகாவலி ஆறு வழி திருப்பத்திட்டம்—பாகம் I, திட்டம் I ல் பொல்கொல்ல சுரங்க தொடக்கத்தின் கட்டுக்காஸ்தொட்ட–மடவல பாதை திருப்பம்

ஒப்பந்தகாரரிடம் குறைந்தபட்சம் முதல் தர டக்டர் 1, இரண்டாதர டக்டர் 2, தண்ணீர் பவுஸர் 1, மண் அமத்தும் ரோலர், லொறி 2, ஸ்கிரேபர் இயந்திரம் ஆகிய இயந்திரங்கள் இருக்க வேண்டும். அவற்றை நிரூபிக்க நற்சாட்சி பத்திரங்கள் சமர்பிக்க வேண்டும்.

இக்கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பப்பட வேண்டும். இதற்கான கேள்விப் பத்திரங்கள் பொல்கொல்ல உக்குவலை, போவத் தன்ன உபநீர்ப்பாசன அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ம் திகதி முதல் ஏப்பிறல் மாதம் 5 ம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இக்கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகத்தையும், தற்போது இத்திணைக்களத்துடன் நடத்தும் வேலைகளின் விபரத்தையும் அதன் முன்னேற்றத்தையும் விபரிக்கும் நற்சாட்சி பத்திரம் சமர்பிக்க வேண்டும்.

மேற்கூறிய பொறியியலாளரின் காரியாலயம் ஒன்றில் அல்லது கச்சேரியில் ரூபா 100 கட்டி, கட்டிய பற்றுச்சீட்டை காண்பித்து வெற்றுப் பத்திரம் கோர வேண்டும். இக்கேள்விக்கான மேலதிக விபரங்களை பொல்கொல்ல உபநீர்ப்பாசன அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். சோமசுந்தரம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மகாவலி திட்டம்.

நீர்ப்பாசன காரியாலயம்,
பொல்கொல்ல,
9.3.70.

3–380—20.3.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மாத்தளை உப–பிரிவு

பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் நத்தாரம்பொத்தை குண்டசாலையில் உள்ள மத்திய மாகாண பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினுல் 1970 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15 ஆம் திகதி புதன்கிழமை 10 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அதன்பின் உடனே திறக்கப்படும்.

அவ்வவ் வேலைக்கு எதிரே காட்டப்பட்டுள்ள அல்லது அவைக்கு மேற்பட்ட தொகைக்கு நீர்ப்பாசன திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள கொந்தராத்துக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் கிராமாபிவிருத்திச் சங்கங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகைமையுடையவராவர்.

| கேள்வி இல | வேலை விபரம் | பதிவுத் தொகை | கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1 | துண்ணபிந்துண குளம் புனருத்தாரண வேலை (கட்டு காடு துப்பரவாக்குதல், மண்வேலை மட்டும்) | 45,000 .. | 50 00 |
| 2 | வவ்வத்தன்ன குளம் புனருத்தாரண வேலை (ரேட்டு வேலை, குளவடிச்சல் (ஸ்பில்) வேலை, சலூஸ் வேலை மட்டும் | 22,000 .. | 25 00 |

கேள்விப்பத்திரங்கள் மாத்தளை உப–நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில், 1970 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதலாம் தேதி முதல் 12 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருபவர் தமது பதிவுப் புத்தகத்துடன் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி அவ்வேலைகளுக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகளிடம் இருந்து வேலைகள் முறையை நடைபெறுகின்றனவா என்று அறிவதற்காகிய பத்திரங்களும் பெற்று அனுப்புதல் வேண்டும். கேள்வி இல. (1) இல் உள்ள வேலை இயந்திரங்களின் உதவி கொண்டே செய்ய வேண்டி இருப்பதால் கேள்வியாளர்கள் தம்மிடமுள்ள இயந்திரங்களின் விபரங்களையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். இவ்வேலைக்காய இயந்திரங்களைக் கொண்டுள்ள தகுதிவாய்ந்த கேள்வியாளர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரக் கட்டணமாக மேல் கூறியுள்ள தொகையை இக்காரியாலயத்திலோ அல்லது ஏதாவது கச்சேரியிலோ செலுத்திய பற்றுச் சீட்டுடனே இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். மேற்கூறிய சங்கங்கள் கேள்விக்கட்டணம் செலுத்தத் தேவைப்படாது.

மேலதிக விபரங்கள் மாத்தளை உப–பிரிவு நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. கனகலிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மாத்தளை உப–பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
மாத்தளை,
1970 ம் ஞூ மார்ச்சு மீ 10 ந உ.

3–402—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல 14,898

## காணி அபிவிருத்தி இலாகா

**1969/70 நிதிவருடத்தில் முதலாவது/இரண்டாவது பாதியில் திருகோணமலை பெரும் பகுதியில் இருக்கும் காணி அபிவிருத்தி அதிகாரியின் கீழ் கூறப்படும் திட்டங்கட்கு கட்டிட சாமான்கள் விநியோகிப்பதற்காக கேள்விப் பத்திர அறிவித்தல்கள்**

திருகோணமலை காணி அபிவிருத்தி அதிகாரியால் அல்லை, வான்அலை, கல்மற்றியாவ, மொறவேவ, கந்தளாய், திருகோணமலைப் பட்டணம், வேப்பங்குளம், மங்களவேவ ஆகிய கட்டிடத் தாபனங்கட்கு கட்டிட சாமான்கள் விநியோகிப்பதற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) கருங்கல் 6" 9" —பருமனுள்ள கீப்பு.
(2) உடைத்தகல்—கீப்பு வீதம் 4".
(3) உடைத்தகல்—கீப்பு வீதம் 2".
(4) உடைத்தகல்—கீப்பு வீதம் 1½".
(5) உடைத்தகல்—கீப்பு வீதம் 1".
(6) உடைத்தகல்—கீப்பு வீதம் ¾"
(7) உடைத்தகல்—கீப்பு வீதம் ½"
(8) செங்கல் (8" 4½" 2") அளவுடைய 1,000 வீதம்.
(9) ஆற்றுமணல் கீப்பு வீதம்.
(10) சுட்ட சுண்ணும்பு—புசல் வீதம்.
(11) பச்சைச் சுண்ணும்பு—புசல் வீதம்.
(12) ஓடு (7 அடிக்குக் குறையாத நீளமும் 18 அங்குலத்திற்கு குறையாத அகலமும் கொண்ட 1,000 சோடிகள் வீதம்).

2. கீழ்க்காணும் விநியோக முறைகட்கு வெவ்வேறு விகிதங்கள் குறிக்கப்படவேண்டும்:—

(அ) தோட்டத்தில் இருந்து.
(ஆ) போறணையில் இருந்து (போறணையும், சூளையும் 10 மைல் சுற்றுடலில் இருப்பின்).

3. கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50 கட்டுப்பணமாக ஒவ்வொரு திட்டத்திற்கும் இவ்வலுவலகத்தில் அல்லது வேறு ஏதாவது கச்சேரியில் கட்டிய பற்றுச்சீட்டு கொடுக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ந் திகதி மு. ப. 9.30 மணிவரை வழங்கப்படும்.

4. எல்லாக் கேள்விக்காரர்களும் தங்கள் பெயர், விலாசம் என்பன வற்றை தெளிவாக எழுதவேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் வெவ்வேறு இணைப்பிரதிகள் புறம்பாக அனுப்புதல் வேண்டும். அவை பின்வருமாறு குறிப்பிடவேண்டும் : " காணி அபிவிருத்திப்பகுதி, திருகோணமலை பிரிவிற்கான கட்டிட சாமான்களுக்கான கேள்விப்பத்திரம் ". இவற்றை பதிவுத் தபால் மூலம் காணி அபிவிருத்தி அதிகாரி, திருகோணமலை என்ற விலாசத்திற்கு அனுப்பலாம். அல்லது இதற்கான இக்கந்தோரில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கலாம்.

**குறிப்பு.**—மேற்படி கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ம் திகதிக்கு முன்பதாக சேர்க்கப்படல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் குறிக்கப்பட்ட தொகைப் பொருட்களை குறிக்கப்பட்ட காலவெல்லைக்குள் காலத்திற்குக் காலம் இரண்டு வாரத் தவணை அறிவித்தலில் பொருட்களை விநியோகிப்பதற்கு அன்றேல் கொண்டு பங்கீடு செய்வதற்கு என்னுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். கேள்விக்காரர்கள் யாரேனும் இவ்வண்ணம் விநியோகம் செய்ய மறுத்தால் அல்லது தவறினுல் அவர் தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் கேள்விக்குரிய கட்டுப் பணத்தையும் இழக்க நேரிடும்.

6. கேள்விக்காரர் விரும்பினுல் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் அதாவது 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ந் திகதி காலை 10 மணிக்கு சமூகமளிக்கலாம்.

7. திருகோணமலை காணி அபிவிருத்தி அதிகாரி அவர்கட்கு இக் கேள்விப் பத்திரங்களை தள்ளுபடி செய்வதற்கோ அல்லது ஏற்கவோ அல்லது சிலவற்றை மாத்திரம், அல்லது எல்லாவற்றையும் ஏற்கவோ தள்ளுபடி செய்யவோ பூரண அதிகாரம் உண்டு.

8. மற்றைய எந்த விபரங்களையும் கீழ் கையொப்பமிட்டிருக்கும் அதிகாரியிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

த. கனகலிங்கம்,
காணி அபிவிருத்தி அதிகாரி.

காணி அபிவிருத்தி அலுவலகம்,
பிரட்ரிக் கோட்டை, திருகோணமலை,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 4 ந வ.

3-278—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## கடற்றெழில் திணைக்களம்

**பயிற்சி வள்ளம் " புகுனுமாறு 1 " இன் விற்பனைக்கான கேள்விகள்**

" புகுனுமாறு 1 " எனப்படும் ஒரு வள்ளத்தை விற்பதற்கான கேள்விப் பத்திரங்கள், கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றெழில் இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களும், ஏனைய விபரங்களும் 1970.4.8 ந் தேதி நண்பகல் 12 மணிவரை கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விகள் 1970.4.9 ந் தேதி காலை 10.30 க்கு முடிவுறும்.

4. கேள்வி வைப்புப் பணம் ரூபா 200.

ஐ. ஒ. கே. ஜீ. பர்ணுந்து,
கடற்றெழில் இயக்குநர்.

கடற்றெழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 11 ந வ.

3-381—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## கட்டிடங்கள் திணைக்களம்

வெங்கல செட்டிக்குளம் பிரிவு காரியாதிகாரி அலுவலகம் கட்டுதலுக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் கட்டிடங்கள் திணைக்களம் வடபகுதி கண்காணிப்புப் பொறியியலாளர் காரியாலய கேள்விச்சபையின் தலைவரால் 1970 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கட்டிடங்கள் திணைக்கள வவுனியா மாவட்ட நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப்படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப் பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலை கட்டிடங்கள் திணைக்களத்தில் ரூபா 47,400 க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 50 செலுத்திய பற்றுச்சீட்டை 1970 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10 வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களை கோரவிரும்பும் விண்ணப்பக்காரர் பற்றுச்சீட்டை கொடுக்கும்போது நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து தகுந்த பத்திரத்தைப் பெற்று அதில் கைவசமிருக்கும் வேலைகளின் விபரங்களைக் குறிப்பிட்டு அதற்கேற்ற கேள்விச்சபைகளுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள கட்டிடங்கள் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

தெ. மாணிக்கம்,
கண்காணிப்பு பொறிவலாளர், வடபகுதி,
(கட்டிடங்கள்).

கண்காணிப்பு பொறிவலாளர் அலுவலகம், வடபகுதி,
கட்டிடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்,
1970.3.11.

3-384—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## பிரபல ஏல விற்பனை

கீழ்தரப்பட்டுள்ள விபரம் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் உபயோகிக்கப்பட்ட உடைகளும் மற்றும் பொருட்களும் ஏல விற்பனைக்கு இருக்கின்றன. அப்பொருட்களை மாத்தளை பொலிஸ் நிலையத்தில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையும் பார்வையிடலாம். ஏலம் கேட்டுப் பொருட்களை எடுப்பவர்கள் உடனடியாக முழுப் பணமும் செலுத்தி பொருட்களை எடுக்க வேண்டும். 26.3.70 முற்பகல் 10 மணியளவில் பொலிஸ் நிலையத்தில் விற்பனை இடம்பெறும்.

| | |
|---|---|
| துவிச்சக்கர வண்டிகள் | 10 |
| துவிச்சக்கர கரியர் | 1 |
| துவிச்சக்கர விளக்கு | 1 |
| அளவை நாடா | 1 |
| ஆமை பூட்டுகள் | 7 |
| மேசைக்கடிகாரங்கள் | 1 |
| 4 கலன் கொள்ளும் தகரங்கள் | 27 |
| 1 கலன் கொள்ளும் தகரங்கள் | 22 |
| கவர் செக்ஸ் | 1 |
| கரம் போட் | 2 |
| சயிக்கிள் பம்ப் | 1 |
| ரெனிஸ் வலை | 1 |
| புஸ்கோட் வக்கில் | 7 |
| சாரதிகள் தொப்பி | 7 |
| குண்டுப் பெட்டி | 18 |
| P கப்ஸ் | 2 |
| கைத்துப்பாக்கி உறைகள் | 2 |
| கிட்றக் | 11 |
| காக்கி றெயின் கோட் | 1 |
| காக்கி ரியூனிக் | 17 |
| காக்கி புஸ்கோட் | 14 |
| காக்கி கல்சட்டைகள் | 26 |
| காக்கி கழிசான்கள் | 5 |
| Boot சப்பத்துகள் | 270 |
| பட்டிகள் | 18 |
| கன்வஸ் சப்பத்துகள் | 4 |
| தும்பு மெத்தைகள் | 33 |
| சிறிய குண்டுபெட்டிகள் | 2 சோடி |
| றபர் றெயின் கோட் | 25 |
| நீல கால்மேஸ் | 6 சோடி |
| தொப்பிகள் | 161 |
| மேசை விளக்குகள் | 1 |
| அலடின் விளக்குகள் | 1 |
| P/விளக்குகள் | 1 |
| ச./பெல் | 1 |

J. V. B. பெரேரா,
உப பொ. அதி.

பொலிஸ் காரியாலயம்,
மாத்தளை.

3–372—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## சுங்க ஏலவிற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இவை விற்பனை செய்யப்படும் நேரமும் இடங்களும் கீழே தரப்பட்டிருக்கின்றன. இப்பொருட்களை விற்பனை நடைபெறும் இடத்தில், விற்பனை நடைபெறும் தினத்தன்று காலை 9.00 மணி முதல் 10.00 மணிவரை பார்வையிடலாம். ஏலத்தில் வாங்கும் பொருட்களின் விலையின் 25% ஏலம் முடிந்தவுடன் செலுத்தப்படல்வேண்டும். சுங்கசேகரிப்பாளர் திருப்திகரமானதாகக் கருதும் கேள்வி விலைகளே ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி விலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து ஏழு (7) நாட்களுள் பொருட்கள் எடுத்துச் செல்லப்படவேண்டும்.

எஸ். எம். ஜே. சேனாரத்ன,
யாழ்ப்பாணம் மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம், 1970 ம் ஆண்டு பங்குனி மீ 4 ந் உ.

இடம் : சுங்க அலுவலகம், யாழ்ப்பாணம்.

நேரம் : 23.3.1970 காலை 10.30 மணி.

1. 2 ரின் கட்டி வெண்ணெய் (சீஸ்).
2. 10 கட்டு நைலோன் மீன்பிடி வலை (புதிது).
3. 120 வின்செஸ்டர் டோர்ச் லைட்.
4. 11 மூடை பாக்கு.
5. 144 வின்செஸ்டர் டோர்ச் லைட்.
6. 230 ரின் “ சக்கரின் ” தூள் ( 1 இரு. ரின்).
7. 1 ரின் மென்தோல்.
8. 3 பெட்டி “ சக்கரின் ”, டோர்ச்லைட், சாதிக்காய்.
9. 8 பெட்டி “ சக்கரின் ”, டோர்ச்லைட், நைலோன் நூல்.
10. 40 மூடை கொட்டைப்பாக்கு.
11. 22 தகரம் “ ஹைட்ரோ சல்பேட் ” சோடா.
12. 1 போத்தல பிரண்டி.
13. 1 போத்தல் மீன் எண்ணெய்.
14. முடி மயிர்.
15. 1 போத்தல் பிரண்டி (சீனு).
16. கறுவா.
17. 1 மூடை கொத்தமல்லி.
18. 1 அவுட்போட் மோட்டார்.
19. 1 அவுட்போட் மோட்டார்.
20. 4 குடை.
21. 1 அவுட்போட் மோட்டார்.
22. 8 குடை.
23. 1 குடை
24. 60 ரின் “ சக்கரின் ”.
25. 25 மூடை கராம்பு.
26. தேங்காய் எண்ணெய்.
27. சாதிக்காய்.
28. கராம்பு.

இடம் : சுங்க அலுவலகம், வல்வெட்டித்துறை.
நேரம் : 3.4.1970 காலை 10.30 மணி.
1. கட்டு மரங்கள்.

3–427—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **மார்சு** | 5.3.70 | வியாழன் | 27.2.70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 13.3.70 | வெள்ளி | 5.3.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 20.3.70 | வெள்ளி | 13.3.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 26.3.70 | வியாழன் | 19.3.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| **ஏப்பிறல்** | 3.4.70 | வெள்ளி | 25.3.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி | 3.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி | 8.4.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி | 17.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் | 23.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| **மே** | 8.5.70 | வெள்ளி | 30.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி | 8.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி | 15.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி | 22.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| **யூன்** | 5.6.70 | வெள்ளி | 29.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் | 5.6.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் | 11.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் | 18.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகன்.*

**அரசாங்க அச்சகப் பகுதி,**
**கொழும்பு,**
1970 **ஆம்** ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது